**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை.திரு.S. முத்துராமன், B.L.,**

சார்பு நீதிபதி, மன்னார்குடி

2055 திருவள்ளுவராண்டு ஸ்ரீகுரோதி வருடம் வைகாசி மாதம் 29 ஆம்நாள்

2024 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 200/2023**

CNR No.TNTV05-000798-2023

**செல்லப்பாகன்** ...... **வாதி**

**எதிர்**

**சரவணன்** .........**பிரதிவாதி**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லாத் தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னர், இன்று (11.06.2024) இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வாதிக்கு , பிரதிவாதி தாவா தொகையான ரூ.1,13,298/-க்கு பின்வட்டியுடன் செலவுத் தொகையும் சேர்த்து பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி வழக்குரையின் சுருக்கம் :-

வாதியிடம், பிரதிவாதி தனது அவசர நிமித்தமாக கடந்த 10.05.2021 ம் தேதியன்று ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து வாதிக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பிராமிசரி நோட் உரிய சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக் கொடுத்தும், அசல் மற்றும் வட்டித் தொகையை திரும்ப செலுத்தி வைக்காமல் வீண் காலதாமதம் செய்தும், வாதியிடம் தொகையை பெற்றுக் கொண்ட பிரதிவாதி, வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் செயல்பட்டு வருவதாகவும், வாதி மேற்படி விபரங்களை தெரிவித்து கடந்த 16.02.2023 ம் தேதியன்று ஓர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டும், அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் கடந்த 25.02.2023 ம் தேதியன்று திருப்பப்பட்டுள்ளது என்றும், கடன் பெற்ற தேதியிலிருந்து நாளது தேதிவரையில் பிரதிவாதியால் எவ்விதமான வரவும் வைக்கப்படவில்லை என்றும், மேலும் பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்த தேதியிலிருந்து 3 வருட காலத்திற்கள் இவ்வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

3. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், கடந்த 26.03.2024 ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் செல்லப்பாகன் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வாதித்தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களாவன வா.சா.ஆ.1 ஆனது வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்- அசல், வா.சா.ஆ. 2 ஆனது வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது (அசல்)-அலுவலக நகல், வா.சா.ஆ.3 ஆனது மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக கவர் ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதித்தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பார்வையிடும்போது, வா.சா.ஆ.1 ஆவணமானது 10.05.2021 ம் தேதியிட்டு பிரதிவாதி தரப்பில் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டின் அசல் வா.சா.ஆ.1 என்றும், வாதியிடம் பெற்ற தொகையை திரும்ப செலுத்திவில்லை என்பதால் 16.02.2023 ம் தேதியன்று வாதியின் வழக்கறிஞரால் தொகை திரும்ப செலுத்த வேண்டி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், அதை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுள்ளது என்பதும் வா.சாஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது. மேலும் வாதித்தரப்பு வழக்கு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் பிரதிவாதி தாவா தொகையை திரும்ப செலுத்தவில்லை என்பது தெரிய வருவதால் தாவா தொகையான ரூ.1,13,298/-ஐ பிரதிவாதி வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் ஆவார் என்றும், வாதி கோரியுள்ள தாவா பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

7. இறுதியாக, தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய தாவா தொகையான ரூ.1,13,298/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் திரும்ப செலுத்தும் நாள் வரை 6% பின் வட்டியுடன் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. தீர்ப்பாணை தொகையை செலுத்துவதற்கு தீர்ப்பு ஆன நாளிலிருந்து ஒரு மாதம் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் நாள் என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.06.11 17:58:10 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி

<u>பின் இணைப்பு</u>

<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>

வா.சா.1. செல்லப்பாகன்

<u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 05.10.2021 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிசரிநோட்டு - (அசல்) |
| வா.சா.ஆ. 2 | 16.02.2023 | வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது (அசல்)- அலுவலக நகல் |
| வா.சா.ஆ. 3 | -- | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட கவர் - அசல் |

<u>3. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை</u>

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.06.11 17:58:21 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.